# மாகாணக்கல்வித் திணைக்களம்
## வட மாகாணம்

மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை - 2017

***வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்***

தரம் - 11

நேரம் :- 1.00 மணி

சுட்டெண் :..........................

புள்ளி :-

பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கம் இடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
  - **பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

'அழகு இல்லம்' என்ற பெயரில் வாணிபத்தை நடாத்தி வரும் தேவசேனா என்பவர் கட்டடத்துறையில் ஒரு பொறியியளாளராகப் பட்டம் பெற்றுள்ளார். இவர் தனது நண்பரான அபிராமி என்பவரை பங்காளியாக இணைத்து கட்டடங்களை நிர்மாணித்துக் கொடுக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார். இவரது தொழிலகம் அமைந்துள்ள இடத்திலுள்ள மக்களுக்கு அரசானது வீட்டுத்திட்டம் என்பதின் கீழ் வீடுகளை அமைப்பதற்கு உதவி செய்து வருகின்றது. இத் திட்டத்திற்கு 'அழகு இல்ல' வாணிபத்தின் செயற்பாடுகள் இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றது. இவ் வாணிபத்தில் 100 தொடக்கம் 150 வரையான எண்ணிக்கை கொண்ட தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

1. இச் சம்பவத்தில் குறிப்பிடப்படும் 'அழகு இல்லம்' வாணிபத்தினால் திருப்தி செய்யப்படும் அடிப்படை மனித தேவை யாது?
   1) உணவு  2) உடை  3) இருப்பிடம்  4) பாதுகாப்பு
2. இச்சம்பவத்திலுள்ள 'அழகு இல்லம்' வாணிபத்திற்கான ஒரு வாய்ப்பாக அமைவது.
   1) தேவசேனா பொறியியல் பட்டத்தைப் பெற்றிருத்தல.
   2) அதிக தொழிலாளரைக் கொண்டிருத்தல்.
   3) தேவசேனாவுடன் அபிராமியும் இணைந்திருத்தல்.
   4) அரசினால் பிரதேச மக்களுக்கு வீட்டுத்திட்ட உதவி கிடைத்தல்.
3. இச் சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட 'அழகு இல்ல' வணிகம் உரித்தாகும் வணிக நிறுவன வகை யாது?
   1) தனியுடமை
   2) பங்குடமை
   3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
   4) சங்கம்



kalvi.lk

4. 'அழகு இல்லம்' வணிகத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் எந்த உற்பத்திக் காரணிக்கு உரித்தாகும்.
    1) நிலம்
    2) உழைப்பு
    3) மூலதனம்
    4) முயற்சியாண்மை

5. இச் சம்பவத்தில் குறிப்பிடப்படும் 'அழகு இல்ல' வணிகம் தொடர்பில் சரியான கூற்றை தெரிவு செய்க.
    1) இது பொருள் உற்பத்தி வணிகம் என்பதுடன் பாரியளவான வணிக அமைப்பாகும்.
    2) இது பொருள் உற்பத்தி வணிகம் என்பதுடன் சிறிய நடுத்தர அளவிலான வணிகம் ஆகும்.
    3) இவ் வணிகம் சட்ட ஆளுமை உடையது.
    4) இவ் வணிகத்தின் பெயரைப் பதிவு செய்வது கட்டாயமானது அல்ல.

6. வணிகம் ஒன்றின் (1) தரமான உற்பத்திப் பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்பவர்களாக காணப்படும் அதே வேளை (2) வணிக நோக்கங்களை நிறைவேற்றுவதில் அக்கறையுடையவராகக் காணப்படுவர். மேலே தரப்பட்ட கூற்றில் (2) மற்றும் (1) ஆகிய இடைவெளிகளில் இடம் பெறக்கூடிய சரியான சொற்களை ஒழுங்கு முறையில் எடுத்துக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
    1) போட்டியாளர்கள், ஊழியர்கள்
    2) உடைமையாளர்கள், வழங்குனர்கள்
    3) வாடிக்கையாளர்கள், முகாமையாளர்
    4) வாடிக்கையாளர், போட்டியாளர்

7. பின்வருவன வணிக சூழல் ஒன்றில் இடம் பெற்ற சில நிகழ்வுகள் ஆகும்.

A :- பாடசாலை மாணவர்களுக்கு கல்வி கற்பதற்காக மடிக்கணனிகள் வழங்கப்படல்.

B :- வணிகங்களின் பொலித்தீன் பாவனைக்கு தடை விதித்தல்.

C :- வணிகங்கள் கணக்குப் பதிவுகளை கணனிகள் மற்றும் தகவல் முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளல்

மேலே தரப்பட்ட நிகழ்வுகளிலிருந்து தொழில் நுட்ப சூழல் சார்ந்த காரணிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள விடைகளைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| 1) A யும் B யும் | 3) A யும் C யும் |
| 2) B யும் C யும் | 4) A, B, C எல்லாம் |

8. காசோலை ஒன்றுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் போது தொடர்புடைய பிரிவினர் அடங்கும் தொகுதி
    1) காசோலை வரைபவர், கட்டளை பெறுபவர், பணம் பெறுபவர்
    2) கொடுணி, பணம் பெறுபவர், கட்டளை இடுபவர்
    3) கணக்கு வைத்திருப்போன், வரைவோன், வங்கி
    4) இலங்கை வங்கி, காசோலையை பெறுநர், தரகர்



kalvi.lk

9. காசோலை முகப்பில் வரையப்பட்டுள்ள சமாந்தரக் கோடுகள் இரண்டிற்கிடையே அல்லது சமாந்தரக் கோடுகள் இன்றி வணிக வங்கியொன்றின் பெயரை எழுதுதல்.
   1) சாதாரண கோடிடல் ஆகும்.
   2) மறுக்கப்படல் ஆகும்.
   3) புறக்குறிப்பிடுதல் ஆகும்.
   4) விசேட கோடிடல் ஆகும்.

10. செலிங்கோ காப்புறுதி கம்பனியில் காப்புறுதி செய்யப்பட்டிருந்த கபிலன் என்பவரது மோட்டார் வாகனமானது அவரது வாகன ஓட்டுனரான செந்தில் வாகனத்தைச் செலுத்திய வேளை விபத்திற்குள்ளானது. இச் சம்பவத்தில் குறிப்பிடப்படும் காப்புறுதி தொடர்பில் முதலாம் கட்சியினர், இரண்டாம் கட்சியினரை முறையே எடுத்துக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
    1) கபிலன், செலிங்கோ காப்புறுதிக் கம்பனி
    2) செலிங்கோ காப்புறுதிக் கம்பனி, கபிலன்
    3) செந்தில், செலிங்கோ காப்புறுதிக் கம்பனி
    4) செலிங்கோ காப்புறுதிக் கம்பனி, செந்தில்

11. தொடர்பாடல் செயன்முறையில் பல்வேறு பண்புகளைக் காணலாம். பின்னூட்டல் என்பதால் கருதப்படுவது
    1) தகவலை வழங்கும் நபர் அல்லது நிறுவனமாகும்.
    2) தகவலை அனுப்புபவர் வழங்கும் தகவல் ஆகும்.
    3) தகவல் அனுப்புபவர் தகவல் தொடர்பாக நடந்து கொள்ளும் முறையாகும்.
    4) தகவல் பெறுபவர் தகவல் தொடர்பாக நடந்து கொள்ளும் முறையாகும்.

12. போக்குவரத்தின் அடிப்படைகளான பாதை, ஊடகம், சக்தி மற்றும் தரிப்பிடம் என்பவற்றிற்கான உதாரணங்களை ஒழுங்கு முறையாகக் காட்டும் சரியான விடையைத் தெரிவு செய்க.
    1) ஆகாய மார்க்கம், பேருந்து, வண்டி தரிப்பிடம், வாயு
    2) பெருந்தெரு, வாயு, கப்பல், துறைமுகம்
    3) நீர்வழி, கப்பல், கனிய எண்ணெய், துறைமுகம்
    4) பெருந்தெரு, பேருந்து, வண்டித்தரிப்பிடம், கனியஎண்ணெய்

13. வணிகங்களில், சில்லறை வணிகமே கூடுதலாகக் காணப்படுகின்றது. சில்லறை வணிகம் தொடர்பான சரியான கூற்றாக அமையாதது
    1) சிறிய சிறிய அலகுகளாக விற்பனை செய்தல்
    2) இறுதி நுகர்வுக்காக விற்பனை செய்தல்
    3) மீள் விற்பனைக்காக விற்பனை செய்தல்
    4) குறிப்பிட்ட ஒரு பண்டம் அல்லது பல்வேறு பண்டங்களை விற்பனை செய்தல்

14. பின்வருவன முகாமைத்துவத்தின் செயற்பாடுகள் ஆகும்.

| | |
|---|---|
| A - செயற்படுத்தல் | B - திட்டமிடுதல் |
| C - கட்டுப்படுத்தல் | D - ஒழுங்குபடுத்தல் |

மேற்படி நிகழ்வுகளின் சரியான ஒழுங்காக அமைவது

| | |
|---|---|
| 1) C,D,B,A | 3) B,D,A,C |
| 2) D,B,C,A | 4) B,D,C,A |



kalvi.lk

15. திட்டமிட்ட செயன்முறையை அமுல்படுத்தல் போது பொருத்தமான வழியில் மனித வளங்களுக்கு வழிகாட்டும் செயன்முறை எந்த முகாமைத்துவ கருமமாகக் கருதப்படுகிறது

1) திட்டமிடல்
2) நெறிப்படுத்தல்
3) ஒழுங்கமைத்தல்
4) கட்டுப்படுத்தல்

16. உற்பத்தி நிறுவனங்களினால் விளம்பரங்களை மேற்கொள்ளல் நடவடிக்கை எந்த சந்தைப்படுத்தல் கலவையின் மாறியைக் குறிக்கின்றது?

1) உற்பத்திப் பொருள்
2) இடம்
3) விலை
4) மேம்படுத்தல்

17. கொடுக்கல் வாங்கலொன்று கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுததும் தாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

| சொத்துக்கள் (ரூ) | = | உடைமையாளர் உரிமை | + | பொறுப்புக்கள் (ரூ) |
|---|---|---|---|---|
| 15 000 | = | | | 15 000 |

மேலே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்

1) சுதன் என்பவரிடம் ரூ 15 000 பெறுமதியான பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டமை.
2) கடன் கொடுத்தோரான பிரணவனுக்கு ரூ 15 000 காசாகச் செலுத்தப்பட்டமை.
3) வாடகை ரூ 15 000 காசாகக் செலுத்தப்பட்டமை.
4) சொந்தத் தேவைக்காக உடைமையாளரால் ரூ 15 000 பெறப்பட்டமை.

18. பின்வரும் விடயங்களிலிருந்து உரிமையில் அதிகரிப்பும் பொறுப்பில் குறைவும் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் ஒன்றாக இருப்பது

1) உரிமையாளர் தனது சொந்த நிதியைப் பயன்படுத்தி வணிகத்தின் சென்மதியாளருக்கு நேரடியாகச் செலுத்திய ரூபா 20 000
2) உரிமையாளர் தனது தனிப்பட்ட சொந்த தேவை கருதி ரூ 10 000 ஐ வணிகத்திலிருந்து பற்றுதல்.
3) உரிமையாளர் ரூபா 20 000 ஐ மேலதிக மூலதனமாக இடல்.
4) ரூபா 500 000 பெறுமதியான இயந்திரத்தினைக் கொள்வனவு செய்தல்.

19. கொடுக்கல் வாங்கலொன்றைப் பதிவு செய்வதற்கான ஓர் இரட்டைப் பதிவு கீழே தரப்பட்டுள்ளது.

வியாபார வருமதியாளர் கணக்கு வரவு ரூ 5000
விற்பனைக் கணக்கு செலவு ரூ 5000

இங்கு நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்

1) ரூ 5000 பெறுமதியான சரக்குகள் கடனுக்கு விற்கப்பட்டமை.
2) வருமதியாளர் ஒருவரிடமிருந்து ரூ 5000 காசாகப் பெற்றுக் கொள்ளப்பட்டமை.
3) ரூ 5000 பெறுமதியான சரக்குகள் காசுக்கு விற்கப்பட்டமை.
4) வருமதியாளரில் ரூ 5000 அறவிட முடியாக் கடனாகப் பதிவழிக்கப்பட்டமை.

20. X நிரல் முதன்மை ஏடுகளையும் Y நிரல் மூல ஆவணங்களையும் கொண்டுள்ளது.

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| 1. காசேடு | A :- நாட்குறிப்பு கைச்சாத்து |
| 2. வங்கிக்கணக்கு | B :- பட்டியல் |
| 3. விற்பனை நாளேடு | C :- வங்கிக்கூற்று |

4. பொதுநாட்குறிப்பேடு D :- பற்றுச்சீட்டு

முதன்மை ஏடுகளின் சரியான மூல ஆவணங்களை உள்ளடக்கிய சரியான ஒழுங்கு முறை

1) D,C,B,A 2) D,B,C,A 3) D,A,B,C 4) D,C,A,B

21. 'செலவு அதிகரித்தல் வரவு குறைதல்' எனும் இரட்டைப் பதிவுத் தத்துவத்தை எடுத்துக்காட்டும் கணக்கு

1) கொடுத்த கழிவுக் கணக்கு 3) காசுக் கணக்கு
2) கொள்வனவுகள் கணக்கு 4) மூலதனக் கணக்கு

22. கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து வணிகத்திற்குக் கிடைத்த ரூ 15 000 பெறுமதியான காசோலை ஒன்று பெறப்பட்டு இரண்டு நாட்களின் பின் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட போது வங்கியால் மறுக்கப்பட்டது. இக் காசோலை மறுப்பைப் பதிவு செய்வதற்கான மூல ஆவணம் (1) ............. ஆகவிருப்பதுடன் மூல ஏடு (2) ................... ஆகும். மேற்குறிப்பிட்ட (1), (2) ஆகிய இடங்களுக்கான சரியான விடையை ஒழுங்குமுறையில் காட்டுவது.

1) பற்றுச்சீட்டு, காசோலை
2) காசோலை மறுப்பு அறிவிப்பு பத்திரம், வங்கிக் கணக்கு
3) காசோலை மறுப்பு அறிவிப்பு பத்திரம், காசுக் கணக்கு
4) காசோலை வைப்புத் துண்டு, வங்கிக் கணக்கு

23. வணிகமொன்றின் 2016.01.31 ஆம் திகதியன்று வணிகத்தின் வங்கி மீதி ரூ 15 500 ஆக இருந்ததுடன் அன்றைய தினத்தில் வங்கிக் கூற்றுக்கமைய மீதி ரூ 16 000ஆக இருந்தது. இவ்வேறுபாட்டுக்குக் காரணமான கொடுக்கல் வாங்கல்களைத் தெரிவு செய்க.

1) வங்கியினால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் ரூ 500 ஆகும்.
2) வங்கிக்கு நேரடியாகப் பெற்ற முதலீட்டு வருமானம் ரூ 500 ஆகும்.
3) நிலையான கட்டளையின் அடிப்படையில் வங்கியினால் அறவிடப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணம் ரூ 500 ஆகும்.
4) வைப்புச் செய்யப்பட்டாலும் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ 500 ஆகும்.

24. பாலன் வணிகத்தின் கடன் கொடுத்தோர் ஒருவரான சாமந்திக்கு ரூ 20 000 பெறுமதியான கடன்தொகையைச் செலுத்தும் போது 10% கழிவொன்றிற்கு உரித்துடையதாக இருந்தது. இது பாலன் வணிகத்துக்கு

1) ரூ 2000 கொடுத்த கழிவாகும்
2) ரூ 2000 பெற்ற கழிவாகும்
3) ரூ 20 000 கொடுத்த கழிவாகும்
4) ரூ 20 000 பெற்ற கழிவாகும்.

25. சில்லறை வசக்கட்டு ரூபா 5000 ஐக் கொண்ட வணிகமொன்றிற்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- 2017.03.31 ஆம் திகதியில் முடிவடைகின்ற மாதத்தில் செலவிடப்பட்ட சில்லறைச் செலவுகள் ரூ 4950 ஆகும்.
- 2017 ஏப்ரல் 01ஆம் திகதியிலிருந்து வணிகத்தின் சில்லறைக்காசு முற்பணத்தை ரூ 6000 வரையில் அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் வணிகத்தின் சில்லறைக்காசு வசக்கட்டை மீள் நிரப்புவதற்காக 2017.04.01 ஆம் திகதியில் சில்லறைக் காசாளருக்கு வழங்க வேண்டிய பணத்தொகை



kalvi.lk

1) ரூ 5950
3) ரூ 1050
2) ரூ 4950
4) ரூ 1000

26. கொள்வனவு, மற்றும் விற்பனை நாளேட்டில் சரியாக உள்ளடங்கும் நடவடிக்கை
   1) காசுவிற்பனை 6000 மற்றும் பவித்திராவிடம் கொள்வனவு 3000
   2) சுதனுக்கு விற்பனை 2000 மற்றும் காசுக்கு கொள்வனவு 3000
   3) நாதனிடம் கொள்வனவு 3000 மற்றும் அரவிந்தனுக்கு விற்பனை 2000
   4) காசுக்கு கொள்வனவு 7000 மற்றும் கோபிகாவிற்கு விற்பனை 8000

27. வணிகமொன்றின் சென்மதியாளருக்குக் காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டதனைப் பதிவு செய்வதற்குப் பொருத்தமான மூலப்பதிவு ஏடு
   1) காசுக்கணக்கு
   2) கொடுப்பனவு உறுதிச்சீட்டு
   3) வங்கிக்கணக்கு
   4) பொதுநாட்குறிப்பு

28. உற்பத்தி நிறுவனம் ஒன்று அதனால் பயன்படுத்தப்படும் இயந்திரத்திற்குப் பெறுமானத்தேய்வு ஏற்பாடொன்றைச் செய்யும் போது அது குறித்துப்பதிவு செய்வதற்கு மூல ஏடாக இருப்பது
   1) பொதுநாட்குறிப்பேடு
   2) காசுக்கணக்கு
   3) விற்பனை நாட்குறிப்பேடு
   4) சில்லறைக் காசேடு

29. வணிகமொன்றின் பரீட்சை மீதியின் வரவுப்பக்கக் கூட்டுத்தொகை ரூ 300 000 ஆக இருப்பதுடன் செலவுப்பக்கக் கூட்டுத்தொகை ரூ 295 000 ஆகவிருந்தது. இவ்வேறுபாட்டின் காரணமாக வணிகத்தின் தொங்கல் கணக்கில்
   1) ரூ 295 000 வரவு மீதியைக் காட்டும்
   2) ரூ 300 000 செலவு மீதியைக் காட்டும்
   3) ரூ 5000 வரவு மீதியொன்றைக் காட்டும்
   4) ரூ 5000 செலவு மீதியைக் காட்டும்

30. பின்வரும் விடயங்களில் உரிமையைக் குறைப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கலாக இருப்பது
   1) செலவீனம், பற்று
   2) வருமானம், பற்று
   3) வருமானம், செலவு
   4) மேலதிக மூலதனம், வருமானம்

31. நிறுவனமொன்றின் செயற்பாட்டு நிலைமையை அறிவதற்காக A கூற்றும், குறிப்பிட்ட ஓர் தினத்தில் நிதி நிலைமையை அறிய B கூற்றும் தயாரிக்கப்படும் . இங்கு A மற்றும் B ஆக குறிப்பிடுவது
   1) வியாபாரக் கணக்கும், பரீட்சை மீதியும்
   2) இலாப நட்ட கூற்றும், நிதி நிலைமைக் கூற்றும்
   3) நிதி நிலைமைக் கூற்றும், இலாபநட்ட கூற்றும்
   4) நிதிநிலைமைக் கூற்றும், பரீட்சை மீதியும்



kalvi.lk

32. சொலமன் வியாபாரத்தின் தகவல்கள் வருமாறு

| | | |
|---|---|---|
| 2016.04.01 இல் இருப்பு | ரூ | 4 500 |
| வருடத்தின் கொள்வனவு | ரூ | 54 300 |
| கொண்டு செல்லல் கூலி | ரூ | 1 700 |
| ஏற்றும் கூலி | ரூ | 9 000 |
| 2017.03.31 இல் இருப்பு | ரூ | 2 500 |

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் கொள்வனவுக் கிரயம் மற்றும் விற்பனைக் கிரயமாக அமைவது

1) ரூ 65 000 மற்றும் ரூ 67 000
2) ரூ 54 300 மற்றும் ரூ 65 300
3) ரூ 63 300 மற்றும் ரூ 67 800
4) ரூ 69 500 மற்றும் ரூ 67 000

33. 2016.12.31ம் திகதியில் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் பெற்ற வாடகை ரூ 12 000 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினம் தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வருமதி வாடகை வருமானமாக ரூ 1 200 காட்டப்பட்டிருந்தது. வருடாந்த வாடகை வருமானம் எவ்வளவு

1) ரூ 1 200
2) ரூ 12 000
3) ரூ 13 200
4) ரூ 10 200

34. கீழ்வருவனவற்றில் சரியான செலவுப் பகுப்பாய்வாக அமைவது

| | விநியோக செலவு | நிர்வாக செலவு | நிதிச் செலவு | ஏனைய செலவு |
|---|---|---|---|---|
| 1 | விற்பனை ஊழியர் சம்பளம் | நிதிக்கிரயம் | வட்டி | கொடுத்த கழிவு |
| 2 | போக்குவரத்து | காப்புறுதி | விற்பனைதரகு | தீயழிவு |
| 3 | விளம்பரம் | வாடகை | வங்கிக்கடன் வட்டி | தீயழிவு நட்டம் |
| 4 | கொடுத்த கழிவு | கட்டிட வாடகை | அறவிட முடியாக்கடன் | மோட்டார் வாகனத் தேய்வு |

35. இயந்திரம் ஒன்றின் கொள்விலை ரூ 580 000
கொண்டுவரல் மற்றும் பொருத்தும் செலவு ரூ 120 000
திருத்தச் செலவு ரூ 10 000
பயன்படு ஆயுட்காலம் 10 வருடங்கள்
இழிவுப் பெறுமதி ரூ 50 000
நேர்கோட்டு முறையும் வருடாந்தத் தேய்வும்

1) ரூ 53 000
2) ரூ 65 000
3) ரூ 70 000
4) ரூ 66 000



kalvi.lk

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 36 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்குக.**
- **பூங்கோதை சில்லறை வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட 31.12.2016 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்படுகின்றது.**

| விபரம் | வரவு (ரூ) | செலவு (ரூ) |
|---|---|---|
| சரக்கிருப்பு (01.01.2016ல்) | 20 000 | |
| கொள்வனவுகள் | 200 000 | |
| விற்பனைகள் | | 343 000 |
| விநியோக வான் (கிரயத்தில்) | 500 000 | |
| விநியோக வான் பெறுமானத்தேய்வு ஏற்பாடு (01.01.2016) | | 100 000 |
| உள்வந்த வண்டிக் கூலி | 9 000 | |
| கொடுத்த கழிவு | 1 200 | |
| வெளிச்சென்ற வண்டில் கூலி | 14 000 | |
| கட்டட வாடகை | 24 000 | |
| வங்கிக்கடன் (10%) | | 100 000 |
| மின்சார செலவுகள் | 12 500 | |
| நிர்வாகச் சம்பளங்கள் | 25 000 | |
| வங்கி மேலதிகப் பற்று | | 12 700 |
| மூலதனம் | | 250 000 |
| | 805 700 | 805 700 |

- மேலதிக தகவல்கள்
  1. 31.12.2016ல் சரக்கிருப்பு ரூ 30 000 ஆகும்.
  2. விநியோக வான்களுக்கு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

36. 31.12.2016ல் முடிவடைந்த ஆண்டிற்கான இவ் வணிகத்தின் விற்ற சரக்கின் கொள்விலை.
    1) ரூ 179 000 2) ரூ 190 000 3) ரூ 199 000 4) ரூ 229 000

37. இவ்வணிகத்தின் நடைமுறைப் பொறுப்பு
    1) வங்கி மேலதிகப் பற்று 3) வங்கிக்கடன்
    2) விநியோக வானின் பெறுமானத்தேய்வு 4) மூலதனம்

38. 31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இவ் வணிகத்தின் வருமானக் கூற்றில் குறிப்பிடப்படும் நிதி மற்றும் ஏனைய செலவுகளின் மொத்த தொகை
    1) ரூ 1 200 2) ரூபா 10 000 3) ரூ 11 200 4) ரூ 22 700

39. 31.12.2016ல் முடிவடைந்த ஆண்டிற்கான இவ் வணிகத்தின் வருமானக் கூற்றில் குறிப்பிடப்படும் விநியோக வான் பெறுமானத்தேய்வு
    1) ரூ 50 000 2) ரூ 100 000 3) ரூ 150 000 4) ரூ 550 000

40. 31.12.2016ல் உள்ளவாறான இவ் வணிகத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி
    1) ரூ 50 000 2) ரூ 350 000 3) ரூ 400 000 4) ரூ 500 000

(1 x 40 = 40 புள்ளிகள்)



kalvi.lk

மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை - 2017

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

தரம் - 11

நேரம் :- 2.00 மணி

சுட்டெண் :.........................

புள்ளி :-

பகுதி II

❖ முதலாம் வினா உட்பட பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II ல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

01. கீழ்க்குறித்த தகவலை அடிப்படையாகக் கொண்டு இலக்கம் 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

சர்வேஸ்வரா என்பவர் ஹோட்டல் முகாமைத்துவ பாட நெறியில் உணவு மற்றும் குடிபானங்கள் உற்பத்தி செய்வது தொடர்பாக கற்றலை மேற்கொண்ட பின்பு சுற்றுலா ஹோட்டலில் நான்கு வருடம் சேவை செய்துள்ளார். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பேரூந்து நிலையத்திற்கு அருகாமையில் உணவகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளார்.

அவர் தனது ரூபா 500,000 பெறுமதியுடைய கட்டிடம் மற்றும் ரூபா 300,000 பணத்தையும் கொண்டு 2017.01.01 இல் காமதேனு என்ற பெயரில் உணவகச் சாலையை ஆரம்பித்துள்ளார்.

ஜனவரி 02 ஆம் திகதி வணிகத்திற்காக ரூபா 200,000 இலங்கை வங்கியில் கடன் பெற்றுக் கொண்டதுடன் தம்ரோ தளபாட விற்பனை நிலையத்தில் ரூபா 100,000 பெறுமதியுடைய தளபாடம் கடனுக்கு கொள்வனவு செய்ததுடன் ரூபா 500,000 பெறுமதியான உணவு தயாரிப்பதற்கானதும் பரிமாற்றங்களுக்குமான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

ஜனவரி மாதத்தில் ரூபா 70,000 செலுத்தி உணவு உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்கள் கொள்வனவு செய்ததுடன் குறித்த மாதத்தில் உணவு மற்றும் குடிபானங்கள் விற்பனை செய்தலின் மூலம் ரூபா 200,000 விற்பனை வருமானம் பெற்றுக் கொண்டுள்ளார். கொள்வனவு செய்த அனைத்து உணவும், மூலப் பொருட்களும் அம் மாதத்தில் நிறைவடைந்தன.

ரூபா 10,000 சம்பளமாகவும் ரூபா 500 தண்ணீர் கட்டணமாகவும் ரூபா 1500 போக்குவரத்துச் செலவாகவும் செலுத்தப்பட்டதுடன் வணிக நடவடிக்கையை இலகுபடுத்துவதற்காக வணிக வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிக்க தீர்மானித்தார். ஜனவரி 31 வரை ரூபா 3000 மின்சாரக் கட்டணம் இன்னும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

1. (அ) காமதேனு ஹோட்டலில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளுக்கமைய குறித்த வணிகம் எந்த வகையினைச் சேர்ந்தது எனக் குறிப்பிடுக?
   (ஆ) குறித்த வணிகத்தில் காணப்படுகின்ற பலம் மற்றும் வாய்ப்பு ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.
2. (அ) இவ் வணிகம் உள்ளடங்குகின்ற வணிக அமைப்பு யாது?
   (ஆ) இவ் வணிகம் பதிவு செய்யப்பட வேண்டுமா? காரணம் குறிப்பிடுக?



kalvi.lk

3. (அ) நோக்கங்களின் அடிப்படையில் வணிகத்தினை வேறுபடுத்தும் போது இவ் வணிகமானது எந்த வகையைச் சார்ந்தது?

   (ஆ) இவ் வணிகத்தில் காணப்படக் கூடிய முகாமைத்துவ செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பு நடவடிக்கையில் ஒரு நடவடிக்கையினைக் குறிப்பிடுக?

4. (அ) இவ் வணிகம் வங்கி நடைமுறைக் கணக்கினை ஆரம்பிக்கப்பட வேண்டியது எவ் வங்கியிலாகும்?

   (ஆ) வங்கியில் நடைமுறைக் கணக்கினை பராமரிப்பதன் மூலம் வணிகத்திற்கு கிடைக்கும் நன்மைகள் 02 ஐ எழுதுக?

5. 2017.01.01 இல் உள்ளவாறான அடிப்படைக் கணக்கீட்டு சமன்பாட்டினைக் குறித்துக் காட்டுக?
6. அவ் வணிகத்தினை ஆரம்பிக்கும் போதுள்ள ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் எவ்வளவு?
7. மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு மூல ஆவணங்கள் இரண்டும் மூல பதிவேடுகள் இரண்டும் தருக?
8. ரூபா 3000 செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் சம்பந்தமாக புத்தகங்களில் பதிவு செய்யப்பட வேண்டிய நாட்குறிப்புப் பதிவைத் தருக?
9. (அ) அவ் வணிகத்தில் 2017.01.31 திகதிக்கு நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்படக் கூடிய நடைமுறையல்லாப் பொறுப்புக்களைக் குறிப்பிடுக?

   (ஆ) அவ் வணிகத்தில் நடைபெற்றுள்ள சொத்து அதிகரிப்பு, பொறுப்பு அதிகரிப்பு சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களை எழுதுக?

10. இவ் வணிகத்தில் 2017.01.31 திகதி முடிவடைந்த மாதத்தில் செயற்பாட்டு இலாபம் எவ்வளவு என்பதைக் குறிப்பிடுக?

(2 x 10 = 20 புள்ளிகள்)

## பகுதி I

## வணிகக்கல்வி

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)**

**02.**

1. (அ) மனித தேவைகள் என்றால் என்ன?

   (ஆ) மனித தேவைகளில் காணப்படும் இரண்டு பண்புகளை எழுதுக.

(2 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.

   (அ) உடமையாளர்கள், முகாமையாளர், ஊழியர்கள் மற்றும் போட்டியாளர் ஆகியோர் வணிகமொன்றின் அகச் சூழல் காரணிகளாவர்

   (ஆ) வணிகங்களை உரிமையின் அடிப்படையில் இலாப நோக்குள்ள வணிகம், இலாபநோக்கற்ற வணிகம் என வகைப்படுத்தலாம்.

   (இ) உற்பத்தி கருமங்களுக்கு பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்கள் உற்பத்திக் காரணிகளில் ஒன்றாகிய மூலதனத்துக்கு உரித்தாகும்.

   (ஈ) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி சேவை உற்பத்தி நிலையம் ஆகும்.

(2 புள்ளிகள்)



kalvi.lk

3. பவானந்தனால் சுகாதாரப் பாதுகாப்புடன் தயாரித்து பாடசாலை உணவகத்திற்கு வழங்கப்படுகின்ற உணவுப் பொதி தொடர்பில் மாணவர், ஆசிரியர் கூடுதலான விருப்பத்தினைக் காட்டுகின்றனர்.
   (அ) இந் நிகழ்வில் குறிப்பிடப்படுகின்ற பாடசாலை உணவகம் தொடர்பில் அக்கறை காட்டும் இரண்டு பிரிவினர்களைக் குறிப்பிடுக.
   (ஆ) மேலே 'அ' வில் நீங்கள் குறிப்பிட்ட ஒவ்வொரு பிரிவினரும் உணவகம் தொடர்பில் அக்கறை காட்டுவதற்கான காரணங்கள் தலா ஒன்று வீதம் தருக.

(2 புள்ளிகள்)

4. திருவரங்கன் என்பவர் புல்லுக்குளத்துக்கு அண்மையில் காணப்படும் புற்களைக் கொண்டு உதவியாளர் ஒருவரின் துணையுடன் நூல் மற்றும் துணிகளை பயன்படுத்தி அழகிய பாய்களை உற்பத்தி செய்து சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்கின்றார்.
   (அ) இச் சம்பவத்தில் குறிப்பிடப்படும் வணிகத்தின் இரண்டு உற்பத்திக் காரணிகளை எழுதுக.
   (ஆ) மேலே 'அ' வில் குறிப்பிட்ட ஒவ்வோர் உற்பத்திக் காரணிகளுக்கும் இச் சம்பவத்தில் இருந்து ஒவ்வோர் உதாரணம் தருக.

(2 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**03.**

1. (அ) வியாபாரம் என்றால் என்ன?
   (ஆ) வணிக நடவடிக்கைகளுக்கு உதவும் துணைச் சேவைகள் இரண்டினை எழுதுக.

(2 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.
   (அ) வணிகமொன்று ஊழியருக்கு இடையே தொடர்பாடலை பரிமாற்றம் செய்தல் அகத்தொடர்பாடல் ஆகும்.
   (ஆ) காசோலை ஒன்றிற்கு பணம் கொடுக்க வேண்டியவர் (வரைவுணி) எப்போதும் ஒரு வணிக வங்கி ஆகும்.
   (இ) இழப்பீடு என்பது ஒரு காப்புறுதித் தத்துவம் ஆகும்.
   (ஈ) வழி, சாதனம், சக்தி, தரிப்பிடம் என்பன போக்குவரத்தின் அடிப்படைகள் ஆகும்.

(2 புள்ளிகள்)

3. பேசாலைக் கிராமத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற 50 பேர் ஒன்று சேர்ந்து தாம் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் கடலுணவுப் பொருட்களுக்கு நியாயமான விலையை பெறும் நோக்கில் ஜனநாயக நிர்வாகத்துடன் கூடிய சுயாதீனமான அமைப்பொன்றை ஆரம்பிப்பதற்கு எண்ணுகின்றனர்.
   (அ) மேற்குறித்த கடலுணவு உற்பத்தியாளர்களுக்கு நீங்கள் முன்மொழியும் வணிக அமைப்பு வகை யாது?
   (ஆ) மேலே குறிப்பிட்ட வணிக அமைப்பின் அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

(2 புள்ளிகள்)

4. பழங்கள் விற்பனை செய்யும் வாணிபம் ஒன்று நடாத்திச் செல்லும் விதுசன் என்பவர் பழக்கூடைத் தொகுதியொன்றை புகையிரதத்திற்கு அனுப்பி வைக்குமாறு வழங்குநரான யதுசனுக்கு தொலைபேசியில் அறிவிக்கின்றார். அதனை ஏற்றுக் கொண்ட யதுசன் அத்தினமே பயணிக்கின்ற புகையிரதத்தில் பழக் கூடைத் தொகுதி ஒன்று அனுப்புவதாக ஒப்புக் கொள்கின்றார்.

(அ) பழங்களை அனுப்புவதற்கு விதுசன் புகையிரதத்தினை தெரிவு செய்தமைக்கான காரணங்கள் இரண்டு தருக?

(ஆ) மேலே கூறப்பட்ட நிகழ்வுக்குரிய தொடர்பாடல் செயன்முறைகளை பாய்ச்சல் கோட்டு வரைபடம் மூலம் காட்டுக.

(2 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**04.**

1. (அ) முகாமைத்துவம் என்றால் என்ன?

(ஆ) சந்தைப்படுத்தல் கலவையில் உள்ளடங்கும் மாறிகள் எவை?

(2 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதை குறிப்பிடுக.

(அ) பங்குடமையில் ஈடுபடுத்திய மூலதனத்துக்காக பங்காளருக்கு கிடைக்கும் திரும்பல் பங்கிலாபம் ஆகும்.

(ஆ) இறுதி நுகர்வோருடன் தொடர்புபட்டிருக்கும் நபர் சில்லறை வியாபாரி ஆவார்.

(இ) குறுக்குக் கோடுகளுக்கு இடையில் கொடுணிகணக்கு எனக் குறிப்பிட்டால் பெறுபவர் கணக்கில் மட்டுமே வைப்புச் செய்ய முடியும்.

(ஈ) சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள் மனித தேவைகள், விருப்பங்களை திருப்தி செய்வதை மையமாக கொண்டது. (2 புள்ளிகள்)

3. முகாமைத்துவக் கருமங்களைப் பாய்ச்சல் கோட்டுப் படத்தில் காட்டுக.

(2 புள்ளிகள்)

4. பாடசாலைப் பைகளை தயாரிக்கும் வணிகமொன்று ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டு இருந்ததுடன் அதில் இப்புதிய பைகள் விசேட துணிகளை பயன்படுத்தி தைக்கப்பட்டுள்ளதாகவும், 01.08.2017 இல் வவுனியா நகர மண்டபத்தில் அவற்றை அறிமுகம் செய்யவுள்ளதாகவும் அன்றைய தினம் செய்யப்படும் சகல கொள்வனவுகளுக்கும் 50% வியாபாரக் கழிவு வழங்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(அ) தமது சந்தைப்படுத்தல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மேற்கூறப்பட்ட வணிகத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகள் இரண்டினை எழுதுக.

(ஆ) மேலே 'அ' இல் எழுதிய ஒவ்வொரு சந்தைப்படுத்தல் கலவை மாறிக்கும் இச் சம்பவத்தில் உள்ளடக்கியுள்ள ஓர் உதாரணம் வீதம் தருக?

(2 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

## பகுதி II கணக்கீடு

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)**

**05.**

1. (அ) கணக்கீட்டின் அடிப்படை நோக்கம் யாது?
   (ஆ) வணிகமொன்றின் உடைமையாளரது உரிமையில் மாற்றத்தினை ஏற்படுத்தும் இரண்டு காரணிகளை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

2. எழிலரசி புடவை வணிகத்தின் 2017 மே மாதத்துக்கான கடன் கொள்வனவுகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | பட்டியல் இலக்கம் | வழங்குநர் பெயர் | பொருள் விபரம் | ஏனைய தகவல் |
|---|---|---|---|---|
| 10.05.2017 | 96 | அபிசேக் | ஒவ்வொன்றும் ரூ 200 வீதம் 10 சேட்டுகள் | வியாபாரக் கழிவு 10% |
| 25.05.2017 | 98 | சரவணன் | ஒவ்வொன்றும் ரூ 50 வீதம் 100 கைக்குட்டைகள் | வியாபாரக் கழிவு 5% |

வேண்டப்படுவது

2017 மே மாதத்துக்கான எழிலரசி வணிகத்தின் கொள்வனவு நாளேடு

(2 புள்ளிகள்)

3. நிமலன் என்பவர் 01.01.2017 இல் பாதணிகள் விற்பனை செய்வதற்கான வணிகமொன்றை ஆரம்பித்தார். அன்றைய தினம் நிகழ்ந்த சில கொடுக்கல் வாங்கல் வருமாறு
   1) வணிகத்தில் ஈடுபடுத்திய மூலதனம் காசாக ரூபா 60 000
   2) காசுக்கு வாங்கிய உபகரணங்கள் ரூபா 25 000
   3) மாதாந்தத் தொலைபேசிக் கட்டணம் செலுத்தியது ரூ 6000
   4) வங்கியிடம் இருந்து பெற்ற கடன் ரூ 25 000
   5) மீள் விற்பதற்காக கடனுக்கு கொள்வனவு செய்த பாதணிகள் ரூ 15 000

வேண்டப்படுவது

(அ) மேற்குறித்த ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தினை குறிப்பிடுக.
(விடையளிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள மாதிரியை பயன்படுத்துக. உங்களுக்காக முதலாவது கொடுக்கல் வாங்கல் பதிவு செய்து தரப்பட்டுள்ளது)

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் | = பொறுப்புக்கள் | + உரிமையாண்மை |
|---|---|---|---|
| 1 | + 60 000 காசு | | + 60 000 மூலதனம் |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |



kalvi.lk

(ஆ) 01.01.2017இல் இருந்தவாறு நிமலன் வணிகத்தின் பின்வரும் உருப்படிகளின் பெறுமதிகளை வெவ்வேறாக குறிப்பிடுக.

1) நடைமுறையல்லாச் சொத்துக்கள்
2) நடைமுறைச்சொத்து
3) மொத்தப் பொறுப்புக்கள்
4) உரிமையாண்மை

(04 புள்ளிகள்)

4. முகமட் வணிகத்தினால் 2017 ஜனவரி மாதத்துக்காக தயாரிக்கப்பட்ட சில்லறைக் காசேடு ஒன்றில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் வருமாறு

- 01.01.2017ல் சில்லறைக்காசு மீதி ரூ 100
- 01.01.2017ல் மீள்நிரம்பல் செய்யப்பட்ட சில்லறைக்காசு ரூ 1400
- ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட மொத்த சில்லறைச் செலவு ரூ 1280

வேண்டப்படுவது

(அ) இவ்வணிகத்தின் சில்லறைக்காசுக் கட்டுநிதி?

(ஆ) 01.02.2017 இல் மீள் நிரப்பப்பட வேண்டிய காசு?

(இ) 31.01.2017 இல் சில்லறைக் காசேட்டு மீதி?

(ஈ) மீள்நிரம்பல் நடவடிக்கையின் போது இரட்டைப்பதிவு (பெறுமானத்துடன்)

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

Education கல்வி

**06.**

1. (அ) வழுக்களை சீராக்குவதற்கான முதன்மை ஏடு?

(ஆ) வங்கிக்கடன் பெற்றுக் கொள்ளும் போது இரட்டைப் பதிவை எழுதுக?

(02 புள்ளிகள்)

2. 30.09.2016 இல் இருந்தவாறு சங்கரின் வங்கிக் கணக்கு மீதி ரூ 28 000 ஆகும். ஆனால் 2016 செப்ரெம்பர் மாதத்துக்காக வங்கியில் இருந்து கிடைக்க பெற்ற வங்கிக் கூற்று மீதியானது வங்கிக் கணக்கு மீதியுடன் இணங்க வில்லை. வித்தியாசத்துக்கான காரணங்கள் வருமாறு.

- வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படாத நிலையான கட்டளைக் கொடுப்பனவு வாடகைப் பணம் ரூ 8000
- வைப்புச் செய்த போதிலும் செம்ரெம்பர் மாதத்தில் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ 3000 ஆகும்.
- வழங்கப்பட்ட போதிலும் வங்கியில் சமர்ப்பித்து பணம் பெறப்படாத காசோலைகள் ரூ 6800 ஆகும்.

வேண்டப்படுவது

1) 30.09.2016 ல் உள்ளவாறான வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியை செம்மையாக்குதல்.

2) 30.09.2016 ல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

(04 புள்ளிகள்)



kalvi.lk

3. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப் பதிவினை எழுதுக.

(அ) சுதாவுக்கு பண்டங்கள் கடனுக்கு விற்பனை ரூ 7000

(ஆ) மாலாவிடம் பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு ரூ 5000

(இ) இளங்கோவிடம் இருந்து கிடைக்க வேண்டிய ரூ 3500 அறவிடமுடியாக் கடனாக பதிவு செய்யப்பட்டது.

(ஈ) நிலையான வைப்பில் ரூ 50000 வைப்புச் செய்யப்பட்டது.

(04 புள்ளிகள்)

4. 31.03.2017 இல் உள்ளவாறான தாயகம் வணிகத்தின் பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு (ரூ) | செலவு(ரூ) |
|---|---|---|
| மூலதனம் | | 90 000 |
| விற்பனை | | 64 000 |
| வருமதியாளர் | 42 000 | |
| தளபாடம் | 50 000 | |
| சென்மதியாளர் | | 26 000 |
| வங்கிக்கடன் | | 10 000 |
| தொலைபேசிக் கட்டணம் | 8 000 | |
| கொள்வனவுகள் | 35 000 | |
| சம்பளமும் கூலியும் | 15 000 | |
| உள்வந்த வண்டில் கூலி | 6 000 | |
| காசுமீதி | 25 000 | |
| தொங்கல் கணக்கு | 9 000 | |
| | 190,000 | 190,000 |

மேலே தரப்பட்டுள்ள பரீட்சை மீதியை தயாரித்த பின்னர் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

- கட்டிட வாடகை செலுத்தியது ரூ 2000 தொலைபேசிக் கட்டணக் கணக்கின் வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- விற்பனைக் கணக்கு மீதி ரூ 55 000 பரீட்சைமீதியில் ரூ 64 000 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

(அ) மேலுள்ள தவறுகளை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள்

(ஆ) மேலுள்ள தவறுகளை திருத்திய பின்னருள்ள தொங்கல் கணக்கு

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**07.**

1. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளியினை நிரப்புக. (சொத்துக்கள், பொறுப்புக்கள், செலவீனங்கள், வருமானம், உரிமை)

(அ) பற்றுதல் காரணமாக நிகழும் உரிமையின் குறைவு தவிர்ந்த உரிமையில் இடம் பெறும் ஏனைய குறைவுகள் ........................................ ஆகும்.



kalvi.lk

(ஆ) உரிமையாளரினால் ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் காரணமாக உரிமையில் நிகழும் அதிகரிப்பு தவிர்ந்த உரிமையில் இடம் பெறும் ஏனைய அதிகரிப்புக்கள் ............................................ ஆகும்.

(இ) வணிகத்தின் உரிமையாளர் சார்பாக காணப்படும் சொத்துக்களின் அளவு ............................................ ஆகும்.

(ஈ) கடந்த கால கொடுக்கல் வாங்கல் / நிகழ்வொன்றின் பெறுபேறாக வணிகத்தினால் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் ............................................ ஆகும்.

(04 புள்ளிகள்)

2. அசுபதி வணிகத்தின் 2017.03.31இல் உள்ளவாறான பரீட்சை மீதி

| விபரம் | வரவு (ரூ) | செலவு (ரூ) |
|---|---|---|
| மூலதனம் | | 600 000 |
| 01.04.2016 இல் சரக்கிருப்பு | 20 000 | |
| கொள்வனவுகள் | 100 000 | |
| விற்பனைகள் | | 120 000 |
| கடன்படுநர் | 30 000 | |
| கடன்கொடுநர் | | 44 000 |
| 12% வங்கிக் கடன் | | 15 000 |
| காணிகட்டிடங்கள் (கிரயத்தில்) | 400 000 | |
| இயந்திரங்கள் (கிரயத்தில்) | 200 000 | |
| கொடுத்த கழிவு | 1 500 | |
| பெற்ற கழிவு | | 3 000 |
| வாடகை வருமானம் | | 15 500 |
| விளம்பரம் | 4 000 | |
| காப்புறுதி | 5 000 | |
| ஊழியர் சம்பளம் | 20 000 | |
| வங்கிக் கட்டணம் | 2 000 | |
| காசு மீதி | 15 000 | |
| | 797 500 | 797 500 |

மேலதிக தகவல்கள்

- 31.03.2017 இல் இறுதிச் சரக்கிருப்பின் பெறுமதி 25 000
- இயந்திரங்களுக்கு நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- கடன்பட்டோரில் ரூ 2000 அறவிடமுடியாக் கடனாக பதிவளித்தல் வேண்டும்.

வேண்டப்படுவது

(அ) 31.03.2017இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபநட்டக்கூற்று

(ஆ) 31.03.2017 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று

(08 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page